1970 மார்ச் 9]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தொழிலாளர்கள் தாங்கள் வசிக்கும் குடியிருப்புக்குத் தண்ணீர் வழங்குவதற்காக வரி ரூ. 1.90 மாதம் தோறும் கட்டப்படவேண்டியதைக் கொடுக்க முடியாது என்று முதலில் மறுத்து, அதற்கான வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அது நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாததால் அதன் காரணமாக கேரோ செய்யப்பட்டனர் நிறுவனத்தார். அதில் 8 பேர்களின் மீது வழக்கு தொடரப்பட்டு, 8 பேர்கள் தண்டிக்கப் பட்டார்கள். அதைத் தொடர்ந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடைபெற்றது. பிறகு அந்த வேலை நிறுத்தம் திரும்பப்பெறப் பட்டது.

டிராக்டர்கள் இறக்குமதி

* 276 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள Ago Industries Corporation மூலம் வெளிநாடுகளிலிருந்து (Tractor) கள் வரவழைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த நாடுகளிலிருந்து ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) ருஷ்யா, ருமேனியா, செக்கோஸ்லோவிக்கியா, கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி.

திரு. கொளத்தூர் கோதண்டம் : விவசாயிகளைப் பொறுத்த வரையில் குறைந்த குதிரை ஓட்டமுள்ள டிராக்டர்களைத் தான் விரும்புகிறார்கள். தற்பொழுது பெரிய டிராக்டர்களை விவசாயிகள் வைத்துப் பராமரிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் குறைந்த குதிரை ஓட்டமுள்ள டி.டி. 14 டிராக்டர்களை அதிகமாக இறக்குமதி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : டி.டி. 14 ருஷ்யன் டிராக்டர்கள் 350 வேண்டும் என்று கேட்கப்பட்டதில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் கேட்கின்ற அளவுக்கு விரைவாக மற்ற நாடுகளிலிருந்து கேட்கின்ற அளவு டிராக்டர்கள் அனுப்பப்படுவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. ருமேனியாவிலிருந்து 110 டிராக்டர்களைக் கேட்டோம். அவர்கள் தான் 110-ஐயும் கொடுத்திருக்கிறார்கள். ருஷ்யன் டி.டி. 14, அதாவது 14 குதிரை ஓட்டமுள்ள டிராக்டர்கள் வரவழைப்பது பற்றி அவர்கள் எழுதிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். விரைவிலே அதை அதிகமாக வரவழைத்து அனுப்புவதற்கு மத்திய அரசாங்கம் ஆவன செய்யும்.

திரு. கே. பி. எஸ். மணி : ஐயா, ஊட்டியில் உள்ள இண்டோ-ஜெர்மன் பிராஜெக்டில் மிகச் சிறந்ததாகவும், சிறியதாகவுமுள்ள டிராக்டர்களை ஜெர்மனியர்கள் அங்கிருந்து கொண்டுவந்து உபயோகிக்கின்றார்கள். அத்தகைய டிராக்டர்களின் விலை ரூ. 10,000-லிருந்து

ரூ. 14,000-க்குள் அடக்கப்படுகிறது. ஆகவே, அம்மாதிரி சிறிய டிராக்டர்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைத்து விவசாயிகளுக்குக் கொடுப்பது பற்றி அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : உதகையிலே இருக்கிற ஜி.டி.ஆர். தொடர்புடன் நாம் நடத்துகிற உருளைக் கிழங்கு சாகுபடிக்காக, அவர்கள் சொந்தத்திற்கு, அவர்கள் விருப்பப்படி டிராக்டரைக் கொண்டுவந்து பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் ஜி.டி.ஆர். அரசாங்கத்தை 100 டிராக்டர்கள் வேண்டும் என்று கேட்டிருக்கிறது. இதுவரை ஒன்று கூட அவர்கள் அரசுக்குக் கொடுக்கவில்லை.

திரு. ஆ. துரையரசன் : அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக தஞ்சை மாவட்டத்திற்கு இதுவரையில் டிராக்டர்கள் ஏதாவது வழங்கப்பட்டிருக்கின்றனவா ? அப்படி என்றால் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாவட்ட ரீதியாக எவ்வளவு டிராக்டர்கள் வழங்கப்பட்டன என்கின்ற குறிப்பு இப்பொழுது இல்லை. கேட்கப்பட்ட கேள்வி வெளிநாடுகளிலிருந்து டிராக்டர்ஸ் வரவழைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா, ஆமெனில் எந்த நாடுகளிலிருந்து என்பதுதான். எனவே, தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய பதிலை தயாரித்துத் தர முடியும்.

திரு. என். ராஜாங்கம் : வெளி நாடுகளிலிருந்து டிராக்டர்கள் வரவழைக்க மத்திய கார்ப்பரேஷன் வேலை செய்வதுபோல, அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனுக்கு அந்த உரிமை கொடுக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனுக்குத் தான் அந்த உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு எந்த கார்ப்பரேஷனுக்கும் அந்த உரிமை கொடுக்கப்படவில்லை. மத்திய அரசு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக இவைகளையெல்லாம் தருவித்து, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக அந்த மாநிலத்திலுள்ள மக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருக்கிறது. தனிப்பட்ட முறையில் வேறு எந்த கார்ப்பரேஷனும் இதில் ஈடுபடவில்லை.

கொடைக்கானலுக்கு சுற்றுலா மாளிகை

***277. வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) மத்தியதர வகுப்பினர் கொடைக்கானலில் தங்க விடுதி கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?